

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை நேற்று முன்தினம் (20.12.2025) திறந்து வைத்தார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், த.மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட தொல்லியல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை நேற்று முன்தினம் (20.12.2025) திறந்து வைத்து பார்வையிட்டார்.

### ‘கலைஞர்’ செய்திகள் தொலைக்காட்சி பிரிவுத் தலைவர்

# ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – நூல்களைப் பெற்றுக் கொள்கிறார்!




**சென்னை, டிச. 22-**

**‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி பிரிவுத் தலைவர் ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

**அந்நூல்களின் முதற்படிகளை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்தி உரையாற்றுகிறார்.**

இவ்வினிய விழா பற்றிய விவரம் வருமாறு:-

‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிப் பிரிவுத் தலைவரும் எழுத்தாளருமான ப.திருமாவேலன் - “தீரர்கள் கோட்டம் தி.மு.க.” - “திராவிட அரசியல் - திராவிட அரசு இயல்” - “முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர்” ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூல்களின் வெளியீட்டு விழா இன்று (22.12.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை - கோட்டூர்புரம் - பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, விழாவுக்குத் தலைமை வகித்து, ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களையும் வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், அந்நூல்களைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.யும் வாழ்த்தி உரையாற்றுகிறார்.

முன்னதாக - திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் - பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நூல் அறிமுகவுரையாற்றுகிறார்.

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குநர் பெல்.கு.ராஜன், கவிதா பப்ளிகேஷன்ஸ் சேது சொக்கலிங்கம் உள்ளிட்டோரும் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை மாதிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, தனியார்துறை வேலைவாய்ப்பிற்கான பணியமர்வு ஆணைகளை வழங்கி குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

